1972 ஆகஸ்ட் 21]

பீங்கான் தொழிற்சாலே

* 223 வின.—திரு. பெ. சௌந்திரபாண்டியன் : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா—

குளித்தலே, கரூர், மணப்பாரை ஆகிய வட்டங்களில் கிடைக்கும் வெங்கச் செங்கல், பெல் ஸ்பார்களேக் கொண்டு சிறிய அளவில் ஒரு பீங்கான் தொழிற் சாலே துவக்க செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இல்லே.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலேவர் அவர்களே, என்னுடைய வினவில் குறிப்பிட்ட பகுதிகள் மிகமிகப் பின் தங்கிய பகுதிகள், ஆகவே, அங்கு கிடைக்கின்ற கற்களேக் கொண்டு தனியார் சார்பிலே ஒரு தொழிற்சாலே துவங்க அரசு அனுமதி வழங்குமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : கேட்டால் அனுமதி வழங்கலாம்.

கடலேப் புண்ணுக்கிலிருந்து எண்ணெய் எடுத்தல்

* 224 வின—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடலேப் புண்ணுக்கிலிருந்து எண்ணெய் எடுக்கும் தொழிற்சாலே அமைக்கும் திட்டம் ஏதேனும் அரசு பரிசிலனேயில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) இல்லே.

(இ) கேள்விக்கு இடமில்லே.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலேவர் அவர்களே, எதையெதையோ நாம் இயந்திரமயமாக்குகிறேம். ஆனல் இன்னும், கிராமங்களிலே செக்கிலே இருந்துதான் புண்ணுக்கு எடுக்கிருர்கள். ஏன் அதையும் இயந்திரமயமாக்கக் கூடாது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இப்பொழுதே கிராமங்களிலே இயந்தி ரங்களிலே புண்ணுக்கு எடுப்பதை நான் பார்த்திருக்கிறேன். ஆனல் உறுப் பினர் அவர்கள் கடலேப் புண்ணுக்கிலிருந்து எண்ணே எடுக்கும் தொழிற்சாலே யைப் பற்றிக் கேட்டிருக்கிருர்கள். ஏற்கனவே மூன்று தொழிற்சாலேகள் தமிழ் நாட்டிலே இருக்கின்றன.